**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண். 188/2019**

நாள்: 07.08.2026.

பெயர்: வனஜா (வா.சா.2) க/பெ: ராஜக்கண்ணு

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை...</u>

1) வாதி காசிநாதன் எனது அத்தை மகன் என்றால் இல்லை. தாவா 1ம் இன சொத்தின் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியும், தெற்கில் வீதி, கீழ்புறம் வீடு, வடக்கில் புறம்போக்கு ரோடு, மேல்புறம் சின்னதம்பி வகையறா பாகம். காசிநாதனின் தந்தை அருணாச்சலம் கிரையம் பெற்ற சொத்தின் விஸ்தீரணம் கீழ்மேல் 16 லிங்ஸ் தென்வடல் 53 லிங்ஸ் என்றால் சரிதான், அந்த கிரைய ஆவணம் எழுதியபோது நான் அங்கு இல்லை என்றாலும், அதில் நான் சாட்சி கையொப்பம் போடவில்லை என்றாலும் சரிதான். அந்த ஆவணம் எழுதியபோது எனக்கு என்ன வயது என்றால் சுமார் 10 வயது இருக்கும். அந்த கிரைய சொத்தையே தான் மீண்டும் காசிநாதன், ராமசுந்தரம் இருவரும் சிவசாமி, சாமிதுரை, இளங்கோவன் ஆகியோருக்குள் ஏற்பட்ட பரிவர்த்தனையில் மீண்டும் கண்டு எழுதி வாங்கிக்கொண்டனர் என்றால் சரியல்ல, இரண்டும் வெவ்வேறு சொத்து ஆகும். அருணாச்சலம் கிரைய சொத்து, பரிவர்த்தனையில் காசிநாதன், ராமசுந்தரம் பெற்ற சொத்தும் பழைய வீதிக்கு தெற்கு என்றால் சரிதான். அருணாச்சலம் கிரைய சொத்து, பரிவர்த்தனையில் காசிநாதன், ராமசுந்தரம் பெற்ற சொத்தும் தாவா 1ம் இன சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

2) பரிவர்த்தனை பத்திரம் எழுதப்பட்டதே தவிர அந்த பத்திரத்தின் படி இருவரும் அனுபவம் செய்யவில்லை என்றாலும், அந்த பத்திரம் அமலுக்கு வரவில்லை என்றாலும் சரியல்ல. காசிநாதன் பரிவர்த்தனையில் கொடுத்ததாக சொல்லும் சொத்தையே வேறு ஒருவருக்கு மீண்டும் கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் நான் கூறியுள்ள வாதி தங்கள் குடும்பத்தில் பாகம் பிரித்துக்கொண்டதாக கூறியுள்ளதில் அந்த பாகப்பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன், ஆனால் அதன் விபரங்கள் எனக்கு

ஞாபகம் இல்லை. பரிவர்த்தனை, கிரைய சொத்திற்கும், பாதைக்கும் வடக்கில் சர்வே எண்கள்.343/4, 343/3 ஆகியன அமைந்துள்ளது என்றால் சரிதான். சர்வே எண்கள்.343/4, 343/3 ஆகியன வெங்கடேசனுக்கு பாத்தியம் என்றால் சரியல்ல. சர்வே எண்கள்.343/4, 343/3 ஆகிய சொத்துக்களை வேலி வைத்து வெங்கடேசன் அடைத்தார் என்பதால் காசிநாதன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் புகார் கொடுத்தது உண்மை தான், ஆனால் அது வேலி வைத்ததற்காக கொடுத்தது அல்ல, கடலை காய வைத்ததை தடுத்ததற்காக கொடுத்த புகார் ஆகும். புகாரை விசாரித்த காவலர்கள் காசிநாதன் கிரையம் பெற்ற இடம் வேறு, வேலி அமைத்த இடம் வேறு என்று கூறி காசிநாதன் மீது தான் வழக்கு போடவேண்டும் என்று கூறினார்கள் என்றாலும், அவ்வாறு கூறியதால் காசிநாதன் புகரை திரும்ப பெற்றுக்கொண்டார் என்றாலும் சரியல்ல. நான் வாதிக்கு சொந்தக்காரர் என்பதால் வாதி தாக்கல் செய்த பொய் வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்பதால் வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/ரா.வனஜா/

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.